பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ; எம்.பி.

மலர்: 14] சென்னை: வைகாசி 19உ (2—6—67) வெள்ளி ★ வெளியூர்: வைகாசி 20உ (3—6—67) சனி [இதழ்: 293

பிச்சையெடுப்பதைத் தடுக்கச் சட்டம்

பெங்களூர், சூன் 1—

பிச்சையெடுப்பதைத் தடுப்பதற்கு சீரான ஒரு பொதுச் சட்டத்தை இயற்றுவதுபற்றி கருநாடக மாநில அரசு ஆராய்ந்துகொண்டு வருகிறது.

கருநாடக மாநிலத்தின் பல பகுதிகளிலுமாக இப்போது பல்வேறு விதமான நான்கு சட்டங்கள் அமுலில் இருக்கிறது.

என். வி. என். மலேசியா பயணம்

விமான நிலையத்தில் சிறப்பான வழியனுப்பு!

சென்னை, சூன் 2—

திராவிட முன்னேற்றக் கழக அமைப்புச் செயலாளரும் தமிழகச் சட்டமன்ற மேலவை உறுப்பினருமான திரு. என். வி. நடராசன் அவர்கள், இன்று விமான மூலம் மலேசியாவுக்குப் பயணமானார்.

மலேசிய தி.மு.க. அழைப்பை ஏற்றுச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் என்.வி.என். அவர்களுடன், எழுத்தாளர் திண்டுக்கல் மா. தங்கவேலரும் செல்கிறார்.

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் கழக முன்னணித் தலைவர்களும் தோழர்களும் திரண்டிருந்து சிறப்பான முறையில் வழியனுப்பி வைத்தனர்.

இன்று பிற்பகல் 1-30 மணிக்கு புறப்பட்ட விமானத்தில் இருவரும் பயணமாயினர்; மாலை 4-45 மணிக்கு அவர்கள் சிங்கப்பூர் சென்றடைவர்.

சிங்கப்பூர் விமான நிலையத்தில் சிறப்பான முறையில் வரவேற்க ஏற்பாடாகியுள்ளது.

மலேசியாவிலும், சிங்கப்பூரிலும் 20 நாட்கள் சுற்றுப்பயணம் செய்யத் திட்டமிட்டுள்ள என்.வி.என். அவர்கள், ஏறக்குறைய 40 நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக்கொள்வார்.

சிங்கப்பூரில் நடைபெறும் திருக்குறள் மாநாட்டிலும் கலந்துகொள்கிறார்.

கேரளத்திற்கு அரிசி

முதலமைச்சர் நம்பிக்கை

சென்னை, சூன் 2—

"தமிழகத்தின் இன்றைய உணவுச் சேமிப்பு நிலைமையில் கேரளத்திற்கு அரிசி தர இயலாமலிருக்கிறோம்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், பத்திரிகையாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்கள்.

"அக்டோபர்—நவம்பர் மாதங்களில் கேரளத்திற்கு அரிசி அனுப்ப முடியும் என்று நம்புகிறோம்"

என்றும் முதலமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

'தமிழக மாண்பைப் பரப்பி வருவேன்'

'அண்ணா ஆட்சியின் சிறப்பை விளக்கிடுவேன்'

மலேசியப் பயணம் குறித்து என். வி. நடராசன்

சென்னை, மே 31—

"நான் பிறந்ததிலிருந்து இன்றுவரை உங்கள் குடும்பத்தில் ஒருவனாக—உங்களின் நண்பனாக—மக்களின் தொண்டனாகவே வாழ்ந்துவருகின்றேன். மலேயா, சிங்கப்பூர் சுற்றுப் பயணத்தில் ஈடுபடவிருக்கும் என்னையும், திண்டுக்கல் தங்கவேலரையும் பாராட்டுவதற்கும் வழியனுப்பிவைப்பதற்கும், விழா ஏற்பாடு செய்த தோழர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

"சுற்றுப்பயணம் செய்யும் இடங்களில், தமிழகத்தின் மாண்பையும், அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் இயங்கி வரும் கழகத்தின் பணியையும், அறிஞர் அண்ணா அவர்களின் ஆட்சிப் பற்றியும் மலேசியா மக்களுக்கு எடுத்துச் சொல்லித் திரும்பி வருவோம்"

என்று, கழக அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம். எல். சி. அவர்கள், இங்கு நடைபெற்ற 'வழியனுப்பு விழாவில் கூறினார்.

(பேச்சின் முழு விவரம் நாளை)

மூன்றும் வகுப்புப் பயணிகள் அனுபவிக்கும் தொல்லை

நாடாளுமன்றத்தில் குசேலர் குற்றச்சாட்டு

புதுடில்லி, சூன் 1—

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற இரயில்வே வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது கழக உறுப்பினர் ஜி. குசேலர் பேசுகையில், இந்தத் திட்டம் ஒரு மோசமான வரவு-செலவுத் திட்டமாகும்' என்று கூறினார்.

தமது உரையை தமிழில் ஆற்றினார்.

"மூன்றும் வகுப்புப் பயணிகள் அனுபவித்துவரும் தொல்லைகள் கொஞ்சநஞ்சமல்ல; இந்த நிலைமையைச் சீர்செய்வதற்கான நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும்"

என்றும் அவர் தமது உரையினிடையே கேட்டுக்கொண்டார்.

'நம் நாடு'
இதழில்
புதிய பகுதிகள்!
★
★ திங்கள் முதல் சனிவரை
★ கலங்கரை விளக்கு
★ சட்டமன்றத்தில் சென்ற வாரம்

தமிழகத்தின் தூதுவராகச் சென்று வருக!

சென்னை, மே. 31—

"நம் கழகத்தின் அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், சிங்கப்பூர்—மலேசியா செல்லும் நேரத்தில் அங்கு வாழுகின்ற தமிழ் மக்கள், இதுவரை தமிழகத்திலேயிருந்து சென்ற தலைவர்களுக்கு எந்த அளவில் சிறப்பாக வரவேற்பளித்தார்களோ அதைவிடப் பன்மடங்கு சிறப்பாக வரவேற்புக் கொடுப்பார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

அமைப்புச் செயலாளருடன் சுற்றுப்பயணம் செல்லும் திண்டுக்கல் தோழர் தங்கவேலர் நல்ல எழுத்தாளர்; எழுத்துத் துறையிலே நல்ல ஆற்றல் உடையவர்; 'திராவிடன்' ஏட்டின் மூலம் பல ஆண்டுகளாகத் தமது எழுத்தோவியத்தைத் தந்து கொண்டிருப்பவர்; சுற்றுப்பயணத்தை நல்ல முறையில் இனிது முடித்துத் திரும்பியதும், மலேசியா சுற்றுப்பயணத்தின் வரலாற்று நிகழ்ச்சிகளையும், சுவையான சம்பவங்களையும் ஒரு நூலாக எழுதி வெளியிடுவார் என எதிர்பார்க்கின்றேன்.

கழகத்தின் அமைப்புச் செயலாளர் தமது குடும்பத்தைப்பற்றிக் கவலைப்படாமல்—தமது சுகத்தைப் பற்றிப் பொருட்படுத்தாமல்—தி. மு. கழகம் என்று தோன்றியதோ அந்தத் தொடக்க நாளிலிருந்து கழகத்தின் முன்னோடித் தலைவர்களில் ஒருவராக இருந்து, இன்றையத்தினம் கழகம் அமைச்சரவை அமைப்பதற்கு—நாம் ஆட்சிப் பொறுப்பு ஏற்பதற்குத் தம் உழைப்பினை வழங்கியவர் என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

திரு. என். வி. நடராசன் மட்டுமல்ல; அவர் குடும்பமே கழகத்திற்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறது. சில சமயங்களில் நான்கூடப் பொருமைப் படுவதுண்டு—'நம் பிள்ளைகளும், என். வி. என். பிள்ளைகளைப்போல் இல்லையே' என்று! என் பிள்ளைகள் கழகத்தில் இல்லையோ என்று நினைக்காதீர்கள்; கழகத்தில் அவர்கள் இருக்கின்றார்கள்; ஆனால், 'என்.வி.என். பிள்ளைகளைப் போன்று, கழக நடவடிக்கைகளிலே தீவிர ஈடுபாடு கொண்டவர்களாக இல்லையே' என்பதை நினைக்கும் போதுதான், என். வி. என். மீது நான் பொருமைப்படுவேன். அந்த அளவுக்கு அவரது பிள்ளைகள்—சோமுவும், செல்வமும்—தி. மு. கழகத்தையே தமது பாசறையாகக் கொண்டு பணிபுரிந்து வருகின்றார்கள்; கழகத்தின் வளர்ச்சிக்குப் பாடுபட்டு வருகின்றார்கள்.

பம்பரம் போலச் சுழன்று சுழன்று, தமிழகம் முழுதும் சுற்றுப் பயணம் சென்று, கழகப் பணியாற்றி வரும் என். வி. நடராசன் அவர்கள், மலேசியா, சிங்கப்பூர் செல்வதை, நம் குடும்பத்தில் ஒருவர் சில வாரங்கள் நம்மைப் பிரிந்து கடல் கடந்து செல்லுவதாகவே உணருகின்றோம்.

சுற்றுப் பயணத்தில் ஈடுபடவிருக்கும் அமைப்புச் செயலாளரையும், திண்டுக்கல் தங்கவேலரையும் வழியனுப்பி வைக்கும் இந்தத் திருநாளில், தமிழகத்தின் தூதுவராகச் சென்று—கடல் கடந்து வாழும் தமிழர்களைக்கண்டு — தமிழகத்தின் மாண்பையும், தமிழக ஆட்சியின்—அறிஞர் அண்ணா அவர்களின் அரிய தலைமையில் இயங்கிக்கொண்டிருக்கும் தமிழக ஆட்சியின் வலிவையும் எடுத்துச்சொல்லி சுற்றுப்பயணத்தை நன்கு முடித்துத் திரும்புமாறு வாழ்த்தி அனுபுகின்றோம்."

---அமைச்சர் மு. கருணாநிதி

(என். வி. என். வழியனுப்பு விழாக் கூட்டத்தில்)

தலைமையமைச்சரைவிட அதிகச் சம்பளம் பெறத் தடை!

ஏதென்ஸ், சூன் 2—

தலைமையமைச்சர் பெறும் ஊதியமான 15,000 டாலருக்குமேல் எந்த ஒரு நபரும் ஊதியம் பெறுவது தண்டனைக்குரிய குற்றமாக கிரீஸ் நாட்டின் ஆளும் கட்சி சட்டம் ஒன்றைப் பிறப்பித்திருக்கிறது.

பாங்கிகள், கம்பெனிகளின் டைரெக்டர்களையும், தனியார் துறை—பொதுத்துறைகளில் உள்ள நிர்வாகிகளையும் இச்சட்டம் பாதிக்கும்.

வெளிநாட்டு நிறுவனங்களில் பணிபுரியும் கிரேக்கர்களையும் இச்சட்டம் கட்டுப்படுத்துகிறது.

இச்சட்டத்தை மீறுபவர்கள் வேலை நீக்கம் செய்யப்படுவார்கள்; குறைந்தபட்சம் மூன்று மாதச் சிறைத் தண்டனையும் அவர்களுக்கு விதிக்கப்படலாம்.

முதலமைச்சர் அண்ணா டில்லி பயணம்

மத்திய அமைச்சர்களுடன் பல பிரச்சினை குறித்து விவாதிப்பார்

தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள் சூன் 4-ம் நாள் சென்னையிலிருந்து டெல்லிக்குப் புறப்பட்டுச் செல்லவிருக்கிறார்கள்.

டெல்லியில் அண்ணா அவர்கள் இரண்டு நாட்கள் தங்குவார்கள்.

அப்பொழுது அவர், துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாயைச் சந்தித்துத் தமிழக அரசின் வரவு-செலவுத் திட்ட நிலைமை குறித்தும், பஞ்சப்படிப் பிரச்சினை — உணவு உதவித் தொகை — ஐந்தாண்டுத் திட்ட நிலைமை—கடனைத் திருப்பித் தரும் கால அளவைத் தள்ளிவைத்தல்—ஆகியவை குறித்தும் விவாதிப்பார்.

திட்ட அமைச்சர் அசோக் மேத்தாவையும் அண்ணா அவர்கள் சந்திப்பார்கள்.

தொழில் வளர்ச்சித் துறை அமைச்சர் பக்ருதீன் அலி அகமதைச் சந்தித்து, சேலம் இரும்பு ஆலை குறித்து விவாதிக்கவும் திட்டமிட்டிருக்கிறார்.

ஊதியமின்றிப் பணிபுரிய அமைச்சர்களுக்குப் பயிற்சி

அண்ணா அறிவிப்பு

சென்னை, சூன் 2—

"தமிழக அமைச்சர்கள் யாரும் இதுவரை ஊதியம் பெறவில்லை"

என்று அண்ணா அவர்கள் தெரிவித்தார்கள்.

"எமது அமைச்சர்கள் ஊதியமில்லாமலேயே பணிபுரிவதற்கான பயிற்சி பெற நான் முயன்று கொண்டிருக்கிறேன்"

என்றும் அண்ணா அவர்கள் தெரிவித்தார்கள்.

கூடிய விரைவில் ஏனைய அமைச்சர்களைக் கலந்துகொண்டு எப்பொழுது ஊதியத்தைப் பெறுவது என்பது குறித்து முடிவெடுக்கப்படும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

நம்நாடு

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்பி

திருவள்ளுவராண்டு 1998 வைகாசி 19 (2—6—67) வெள்ளி

புதிய வரிச் சுமைகள்!

[2]

நிதி அமைச்சர் தேசாய், கண்ணை மூடிக்கொண்டு மறைமுக வரிகளை விதித்திருக்கின்றார். வரவு-செலவுத் திட்டத்தில் துண்டு விழக்கூடிய ரூ. 68 கோடியை ஈடுசெய்வதற்கெனக் காரணம் காட்டி, அவர் இவ்வரிகளை விதித்திருக்கின்றார் என்றாலும், அவர் எதிர்பார்ப்பதைவிட இவ்வரிகள் மூலம் அதிக வருமானம் கிடைக்கும்.

துண்டு விழக்கூடிய தொகையை மிகையாக மதிப்பிடுவதும் விதிக்கக்கூடிய புது வரிகளிலிருந்து கிடைத்திடக்கூடிய வருமானத்தைக் குறைவாக மதிப்பிடுவதும் வாடிக்கையாக இருந்து வருகிறது. புது வரிகள் மூலம் கிடைத்திடக்கூடிய வருமானம், தாம் இப்பொழுது கணக்கிட்டு அறிவித்திருப்பதைவிடக் கூடுதலாக இருந்திடும் என்கின்ற உண்மையை தேசாய் அறியாதவர் அல்லர்.

தேசாய் விதித்திருக்கின்ற புதிய உள்நாட்டுச் சுங்க வரிகள், நடுத்தர - ஏழை மக்கள் மீது புதிதாக ஏற்றப்படக்கூடிய சுமையாகும் என்பதை ஏற்கனவே நாம் குறிப்பிட்டிருக்கின்றோம். ஏற்றுமதி செய்யக்கூடிய தேயிலை, காப்பிக் கொட்டை ஆகியவை மீது வசூலிக்கப்பட்டிருக்கின்ற சுங்க வரியின் ஒரு பகுதியைக் குறைத்தால், அப்பொருட்களின் ஏற்றுமதி கணிசமாகப் பெருகி அந்நியச் செலாவணி மிகுதியாகக் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன், உள்நாட்டில் மக்கள் அவ்விரண்டு பொருட்களையும் பயன்படுத்துவதைக் குறைக்க முயற்சி செய்திருக்கின்றார். அதற்காக உள்நாட்டில் விற்கப்படுகின்ற தேயிலைக்கும், காப்பிக் கொட்டைக்கும் விதிக்கப்பட்டிருந்த உள்நாட்டுச் சுங்க வரியின் விகிதத்தை உயர்த்தியுள்ளார்.

இதனால், நிதியமைச்சர் எதிர்பார்த்தபடி அவ்விரண்டு பொருட்களின் ஏற்றுமதியும் உயர முடியுமா என்பதுதான் கேள்வி.

நமது ரூபாயின் அந்நியச் செலாவணி மதிப்பைக் குறைப்பதற்கு முன்னர், காப்பிக்கொட்டை -- தேயிலையின் ஏற்றுமதியினால் நமக்குக் கிடைத்துவந்த அதே அளவு அந்நியச் செலாவணியை, நாணயத்தின் மதிப்பைக் குறைத்ததற்குப் பின்னர் பெறவேண்டுமென்றால், ஏறத்தாழ ஒன்றரை மடங்கு தேயிலையையும், காப்பிக்கொட்டையையும் ஏற்றுமதி செய்தாகவேண்டும். இதுவுமன்றி, வெளிநாடுகளின் போட்டிக்கும் நாம் ஈடுகொடுத்தாக வேண்டும். அந்நிய நாடுகளின் தேயிலை -- காப்பிக்கொட்டைத் தேவையும் மேலும் பெருகவேண்டும். இம்மூன்றும் இயலக்கூடியதா என்பது சந்தேகமே!

தேயிலைமீது இப்பொழுது உள்நாட்டுச் சுங்க வரியின் விகிதம் உயர்த்தப்படுவதன் விளைவாகத் தேயிலையின் ஏற்றுமதி கூடுகிறதோ இல்லையோ -- தேயிலையின் விலை உள்நாட்டில் கூடிவிடும் என்பது மட்டும் உறுதி. உயர்ந்த ரகத் தேயிலை மட்டும்தான் இவ்விலையேற்றத்துக்கு உள்ளாகும் என்பதில்லை; தரத்தில் குறைந்த தேயிலைகூட, இவ்விலையேற்றத்துக்கு உள்ளாகத்தான் செய்யும். இதன் விளைவாக, தரத்தில் குறைந்த தேயிலையை உற்பத்திச் செய்வதிலிருக்கின்ற ஊக்கம் குறையும். இந்த ரகத் தேயிலை உற்பத்தியில் ஈடுபட்டிருக்கின்ற சிறுசிறு உற்பத்தியாளர்கள், இந்த வரி உயர்வால் பெரிய அளவுக்குப் பாதிக்கப்படுவர்.

இப்படி நான்காவது ரகத் தேயிலை, மிகுதியாக நீலகிரியில்தான் உற்பத்தியாகிறது. எனவே, இப்புதிய வரிக்கு உடனடியாகப் பலியாகக்கூடியவர்கள் நீலகிரியிலிருக்கின்ற சிறிய ரகத் தேயிலை உற்பத்தியாளர்களே ஆவர்.

தேயிலை -- காப்பிக்கொட்டைமீது விதிக்கப்பட்டிருக்கின்ற வரியின் விளைவாக, சராசரி மக்களின் வாழ்க்கைச் செலவு, கொஞ்சம் கூடுதலாகத்தான் ஆகும். செலவு கூடுதலாகிறது என்பதற்காக, இவ்விரண்டு பொருட்களையும் பயன்படுத்தி வருகின்ற அளவை மக்கள் குறைத்துக் கொள்ளுவர் என, தேசாய் எதிர்பார்க்கின்றார்.

தேசாய் எதிர்பார்ப்பதுபோல், இவ்விரண்டு பண்டங்களின் அளவைக் குறைத்துக் கொண்டாலும் சரி -- குறைத்துக் கொள்ளாமற் போனாலும் சரி -- இப்பண்டங்கள்மீது விதிக்கப்பட்டிருக்கின்ற வரியினால் மக்களின் வாழ்க்கைச் செலவு மேலும் கூடிவிடும் என்பதை மறுப்பதற்கில்லை.

தேநீர், ஏழை மக்களின் பசியைப் போக்கக்கூடிய பானமாகும். உணவு கிடைக்காத நேரத்திலெல்லாம், தேயிலைதான், ஏழை மக்களின் பசியைத் தணிக்கும் அருந்துணையாக இருந்து வருகிறது. இந்த வரி, பசியைத் தணித்துக் கொள்ளுவதற்கு இருக்கின்ற ஒரே ஒரு சாதனத்தையும் பறித்துவிடுவதாக இருக்கிறது.

ரயான் பட்டு போன்ற மற்ற செயற்கை ரகத் துணிகளுக்கும் வரி போடப்பட்டிருக்கிறது. தங்களுடைய சக்திக்கு மீறிய இயற்கைப் பட்டுத் துணிகளை வாங்கமுடியாதவர்கள், ரயான் போன்ற செயற்கைப் பட்டுத் துணிகளை இன்று பயன்படுத்தி வருகின்றனர். இதன்மீது தேசாய் விதித்திருக்கின்ற வரியினால், இவர்கள் தொல்லைக்கு ஆளாகியுள்ளனர்.

அலுமினியப் பாத்திரங்கள் மீதும், நிதி அமைச்சர் தமது தாக்குதலை நடத்தியிருக்கின்றார். மண்பாண்டங்களைப் பயன்படுத்திவந்த ஏழை மக்கள், அலுமினியப் பாத்திரங்களை வாங்கிப் பயன்படுத்திவருகின்றனர். அலுமினியத்துக்கு விதிக்கப்பட்டிருக்கின்ற வரியினால், அலுமினியப் பாத்திரங்களைப் பயன்படுத்தலாம் என இனி ஏழை மக்கள் ஆசைப்படுவதற்கே இடமிருக்காது.

டீசல் எண்ணெய்க்கும், பெட்ரோலுக்கும் வரி விகிதம் கூட்டப்பட்டிருக்கிறது. இதனால் பஸ் கட்டணம் உயர இடமிருக்கிறது. பஸ் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் எனத் தமிழக அரசாங்கம் முயற்சி செய்துகொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், டீசல் எண்ணெய்க்கு வரி விகிதம் உயர்த்தப்பட்டிருப்பது சிந்திக்கத்தக்கது.

அஞ்சல் கட்டணங்களையும் தேசாய் உயர்த்தியிருக்கின்றார். செய்தித் தாள்களை வெளியூருக்கு அனுப்புவதற்கு இப்பொழுது இரண்டு காசு அஞ்சல் தலை ஒட்டினால் போதும்; இனி அந்த இரண்டு காசுக்குப் பதிலாக ஐந்து காசு அஞ்சல் தலை ஒட்டியாக வேண்டும்.

ஒரு செய்தித் தாளின் விலை 10 காசு என்றால், அதில் பாதி விலைக்கு அஞ்சல் தலை ஒட்டித்தான் ஒரு செய்தித் தாளை அஞ்சல் மூலம் அனுப்பியாக வேண்டும். 10 காசுக்கும் குறைந்த விலையில் விற்கப்படக்கூடிய செய்தித் தாள்களை இனி அஞ்சல் மூலம் அனுப்புவதாக இருந்தால் நட்டத்தில்தான் அனுப்பியாக வேண்டும்.

சிறிய செய்தித் தாள்களின் கழுத்தை நெறித்துக் கொல்லக்கூடிய நிலையில் இந்த அஞ்சல் கட்டணம் விதிக்கப்பட்டிருக்கிறது. சிறிய பத்திரிகைகளின் எதிர்காலத்தைக் கருதியாவது இப்புதிய விகிதத்தை தேசாய் கைவிடத் துணிய வேண்டும்.

— கா. க.

செய்தி விளக்கம்

பிர்லா பேரரசு!

ஒவ்வொரு பேரரசும் உருவாக்கப்படுவதற்கு நெடுங்காலம் தேவை. உருவாக்கப்பட்ட பேரரசு, கண்மூடித் திறக்கும் நேரத்திற்குள் தவிடுபொடி ஆக்கப்படும். இதுதான் சரித்திரம் நமக்கு வழங்கும் பாடம்!

பிர்லா, குடும்பம், இந்தியத் துணைக்கண்டத்தில் உருவாக்கியிருக்கும் பொருளாதாரப் பேரரசு, ஏதோ திடீரென உருவாக்கப்பட்டதன்று!

வெள்ளைக்காரர் இந்திய மண்ணில் வேரூன்றி வணிகம் செய்யத் தொடங்கிய நாள் முதலே--- குறிப்பாக போக்குவரத்துச் சாதனங்களை அமைத்த காலம் முதலே, மெல்ல அடித்தளம் போடப்பட்ட பேரரசு.

வெள்ளை முதலாளிகளுக்கு ஆலவட்டம் சுற்றிக்கொண்டு மெல்ல மெல்ல தங்கள் வணிகத்தில் வளர்ச்சி கண்ட பிர்லா பெருமக்களுக்கு, வெள்ளை ஏகாதிபத்தியத்தை வேரறுக்கத் துடித்து நின்று தோள் தட்டிய காங்கிரசு இயக்கமும் பகையாகவே காட்சி தந்தது!

1947-ல் இந்தியா விடுதலையடைகிற வரையிலும், பிர்லாக்கள், காங்கிரசை எதிர்த்தே வந்தனர்! ஆனால் 1947-க்குப் பிறகு இந்தியாவின் ஆட்சி நிர்வாகம், 'காங்கிரசுக் கட்சியின் கரங்களில் சிக்கிக் கொண்டது' என்று தெரிந்ததுமே, வேறு வழியின்றி மெல்லக் காங்கிரசுக் கட்சியை ஆதரிக்கத் தொடங்கினர்!

காங்கிரசுக் - கட்சியை ஆதரிப்பதென்றால், கட்சிப் பெருந்தலைவர்களைத் தம் வலையில் வலித்துப் போட்டுக்கொள்வது என்பதே பொருள்!

ஒரு துறையில் ஒரு வகையில் மட்டுமே வணிகம் புரிவது என்று தொடங்கிய பிர்லாக்கள், இன்று எல்லாத் துறைகளிலும்--எல்லா வகைகளிலும், அங்கு இங்கு எனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பேரருளாளர்களாய் இருக்கிறார்கள் என்றால், அதற்கு, ஆளுங் கட்சியின் அரவணைப்பே காரணம்!

இந்திய நாட்டைப் பொருளாதார நாடாக்கிடப் பண்டித நேரு கனவு கண்டது உண்மை; ஆனால், அந்த கனவார்வத்தில் அரசு கையாண்ட முறைகள்தான், இந்த பிர்லா ஏகாதிபத்தியத்தில் வந்து முடிந்துவிட்டன!

ஐந்தாண்டுத் திட்டங்களில் தொழில் துறையின் பல பிரிவுகளில், இன்ன அளவு இலக்கினை நாம் எட்டிடவேண்டும் என்று திட்டமிடுவது திட்டக் கமிஷன் வேலையாக இருந்ததே தவிர, எந்த வகையில் அந்த இலக்கினை எட்டிடுவது என்று வகை செய்து கொள்ளவில்லை திட்டக் குழு!

மத்திய அரசின் இந்த பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டார்கள் பிர்லாக்கள்; 'அரசு நினைக்கிற இலக்கினை என்னால் எட்ட முடியும்; அதற்கான என் திட்டம் இதோ; தருகிறாயா லைசென்சு' என்று—இக்கட்டான நேரங்களில் கேட்டார்கள் பிர்லாக்கள்! நாட்டைத் தொழில் மயமாக்கிடும் ஆர்வத்தில், அரசாங்கம் வாரி வாரி வழங்கியது லைசென்சுகளை!

காங்கிரசுக் கட்சி ஆளத் தொடங்கியதற்குப் பிறகு மட்டும் கிட்டத்தட்ட 500 தொழில்களுக்கான அனுமதி பிர்லா குடும்பத்தாருக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்றால், பாருங்களேன்!

தொழில் துறையை வளப்படுத்தியதோடு நின்றிருந்தால்கூடப் பரவாயில்லை. தங்கள் தொழிலுக்குச் சாதகமான கட்சியை ஆட்சியில் இருத்திட முயலுவதுகூடப் பரவாயில்லை--- மன்னிக்கலாம்.

காங்கிரசுக் கட்சியிலேயே தனக்கு வேண்டியவர் இவர்---ஆகாதவர் அவர்---என்று பிரித்து, இந்தியத் துணைக்கண்டத்தின் தலைமை அமைச்சரைத் தம் செல்வாக்கால் தேர்ந்தெடுக்க முடியும் என்று அறைகூவும் அளவுக்கல்லவா அவர் சென்றாராம்!

அவ்வளவு தொலைவு ஏன்? அண்மையில் நடைபெற்றதே---உலகமே கூர்ந்து கவனித்த குடியரசுத் தலைவர் தேர்தல்---அப்போது நடைபெற்றதாகச் சொல்லப்பட்டது என்ன?

பாராளுமன்றத்தின் மைய மண்டபத்தில் பிர்லா---நாள் முழுதும் இருந்து---இந்திரா காந்தியின் விருப்பப்படி ஜாகிர் உசேன் வெற்றிபெற்றிட 'வேண்டியதெல்லாம்' செய்தாராமே!

இதைவிட வெட்கக்கேடு வேறென்ன வேண்டும்?

இவ்வளவும், நாளிதழ்கள் அவ்வப்போது வழங்கிய செய்திகள்!

இதற்குப் பிறகு பிர்லாக்கள், அமைச்சர்களுக்குப் பணம் 'தந்த' கதைபற்றி விசாரணை வேண்டுமென்றால், 'இந்த ஆட்சி'யில் நடைபெறுமா?

அமெரிக்கா போன்ற வளர்ந்துவிட்ட முதலாளித்துவ முறையுள்ள நாடுகளிலேகூட 'டிரஸ்ட்' போன்ற ஏகபோக ஆதிக்க முறைகளைக் கட்டுப்படுத்திடச் சட்டங்கள்---திட்டங்கள் உண்டு; ஆனால் வாயளவில் சமதர்மம் பேசும் இந்த ஏழை இந்தியாவிலோ, அப்படி ஏதும் இல்லை!

ஏகபோக ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்திய தன் விளைவுதான் அந்நிய எண்ணெய்க் கம்பெனி, தன் பெயரைக்கூட மாற்றிக்கொண்டு செயல்பட நேரிட்டது:

ஆனால் இங்கோ?

ஆண்டவனைப்பற்றிப் பக்தர்கள் சொல்லுவார்களே---(அரசாங்கத்தில்) 'எங்கும் நிறைந்தவர்; எல்லாம் வல்லவர்; எதையும் அறிபவர் என்ற அடைமொழிகளுக்குத் தக்கவர்களாகக் காட்சி அளிக்கிறார்கள் இந்தப் பிர்லாக்கள்!

பகிரங்கமாகப் பெயர்களைச் சொல்லிப் புனிதமான நாடாளுமன்றத்தில் குற்றஞ் சாட்டப்பட்ட பிறகும்கூட, இன்னம் பாயிலும் தடுக்கிலும் நுழைந்து பாதுகாப்புத் தேடுகிறார்களே---அதுதான் வியப்பாக இருக்கிறது!

மொத்தத்தில் நேரம் வந்துவிட்டது! காங்கிரசுக்காரர் அர்ச்சுன் அரோராவே தம் திருவாயால் துவங்கி வைத்த இந்தப் பெருமைக்குரிய பிரச்சினையில், விரைவில் ஒரு நல்ல முடிவு ஏற்படும் என்று நம்புவோம்!

காந்தாரம் முதல் விந்தியம்வரை தன் ஆணைச்சக்கரம் சுழன்று ஒளிர ஆட்சி செய்த பேரரசன் அசோகனே, தன் கடைசி நாட்களில், தான் தன் வாரிசாய் ஏற்பாடு செய்த மகன் வயிற்றுப் பேரன் 'சம்பிராதி'யிடம் சட்டியில் பழமும், உணவும் வாங்கி உண்ணும் நிலைக்கு வந்தான் என்பது வரலாறு.

அதேபோலத்தான், தன் எல்லைகளைப் பரப்பி நாடு முழுவதும் தொழில் துறையில் காங்கிரசுக் கட்சியின் உதவியால் ஏகபோக ஆதிக்கம் செலுத்திய பிர்லாக்கள், அதே காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களால் சந்திக்கு இழுக்கப்பட்டிருக்கிறார்கள்!

எதிர்க்கட்சிகள் துணைநிற்கும்போது பிர்லாக்களின் நிலை வெட்டவெளிச்சம் ஆகும் என்று எதிர்பார்ப்போம்!

—முத்து

மின்சார போர்டு நிலம் வாங்கிய ஊழல்

குற்றவாளிகள் மீது சட்டபூர்வ நடவடிக்கை

சென்னை, மே 31—

தமிழக மின்சார போர்டுக்கு முந்திய ஆட்சிக் காலத்தில் எருக்கஞ் சேரியில் நிலம் வாங்கியதில் நிகழ்ந்த ஊழல்கள் பற்றி, முன்பு சட்டமன்றத்தில் எதிர்க் கட்சித் துணைத் தலைவராக இருந்த இன்றைய அமைச்சர் மு. கருணாநிதி, குற்றச்சாட்டு எழுப்பியது நினைவிருக்கலாம்.

இதில் கணக்குத் தணிக்கைக் குழுவின் பரிந்துரைக்கேற்ப, 'முறைகேடான நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள்மீது சட்டபூர்வமாக நடவடிக்கை எடுப்பது உறுதி' என்று அமைச்சர் கருணாநிதி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தலைநகரின் தாகம் தணிக்கும் திட்டம்

தமிழக அரசு ஏற்றுக்கொண்டது

சென்னை, மே 31—

சென்னை நகரக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான திட்டமொன்றைத் தமிழக அரசு ஏற்றுக்கொண்டுவிட்டதாகப் பொதுப் பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி, செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதுபற்றிய அறிவிப்பு, சட்டமன்ற வரவு-செலவுத் திட்டக் கூட்டத்தில் வெளியாகும்.

சென்னையின் குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க ஜேடர்பாளையத்திலிருந்து காவிரி நீரைக் கொண்டு வருவது -- அல்லது வீராணம் ஏரி மூலம் காவிரி நீரைக் கொணருவது -- ஆந்திரத்தின் பெண்ணாற்றிலிருந்து தண்ணீரைப் பெறுவது -- ஆகிய மூன்று திட்டங்கள் உள்ளன; இத்திட்டங்களில் ஒன்றைத்தான் அரசு ஏற்றுக்கொண்டுவிட்டதாக அமைச்சர் தெரிவித்தார்.

ஸ்டேட் பாங்கி ஊழியர் ஆர்ப்பாட்டம்

750 பேர் கூண்டோடு விடுமுறை

சென்னை, மே 31--

ஸ்டேட் பாங்கி ஊழியர் தலைவர் (டில்லி வட்டாரம்) திரு. லால் மாற்றப்பட்டதை எதிர்த்துத் தமிழகம்--கேரளம்--ஆந்திரம்--கருநாடகம் ஆகிய மாநிலங்களில் உள்ள ஸ்டேட் பாங்கி மேற்பார்வை (சூப்பர்வைசிங்) ஊழியர்கள், தங்கள் அலுவலக எதிரில் நேற்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

சென்னையில் இவர்களுக்கு ஆதரவுகாட்டும் வகையில், ஸ்டேட் பாங்கி ஊழியர்--துணை ஊழியர் சங்கமும் ஆர்ப்பாட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டது.

மேலும், இது தொடர்பாக 750 ஊழியர்கள் கூண்டோடு இன்று விடுமுறை எடுத்துக் கொண்டனர்.

சூப்பர்வைசிங் ஊழியர்களின் ஊழிய நிலைமையில் உள்ள குறைபாடுகளைப் பாங்கி அதிகாரிகளுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தெரிவித்துள்ளதாக சென்னை வட்டார ஸ்டேட் பாங்கி சூப்பர்வைசிங் ஊழியர் சங்கத் துணைச்செயலாளர் திரு. எம். முத்துக் கிருஷ்ணன் அறிவிக்கிறார்.

கேரள ஆசிரியர்கள் அகவிலைப் படி உயர்வு

திருவனந்தபுரம், மே 31—

மாநில அரசின் உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களின் அகவிலைப் படி மறு ஆய்வு செய்யப்பட்டு உயர்த்தப்பட்டுள்ளது.

அரசினர் நடத்தும் பள்ளிகள் அல்லாத உதவி பெறும் பள்ளிகளின் ஆசிரியர்கள் இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளனர்.

அரசாங்க அலுவலர்கள் பின்பற்றிவரும் சட்டங்களின்படி நடப்பதாக ஒப்புக்கொண்டவர்கள் ஒரு பிரிவினர்; வேலை செய்வதற்காகக் காலவரை கடந்து ஓய்வு பெற்றவர்கள்.

அரசியல் ஈடுபாடு கொண்டவர்கள் அறுபது வயது வரைக்கும் பணிபுரியலாம்; அவர்கள் இரண்டாவது பிரிவினர்; முதல் பிரிவினருக்கு மத்திய அரசு கொடுக்கும் அளவுக்கு அகவிலைப் படி கிடைக்கும்.

இரண்டாவது பிரிவினருக்கு வீட்டு வாடகைப் படி குறைவாகக் கிடைக்கும்.

உணவு நெருக்கடியின் எதிரொலி?

திருவனந்தபுரம், மே 31—

கேரள மாநிலத்துள்ள பள்ளிகள்—கல்லூரிகள் உள்ளிட்ட கல்வி நிறுவனங்கள், விடுமுறை கழித்துத் திறக்கப்படும் தேதியை ஒத்திவைத்து கேரள மாநில அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

லோயர் தொடக்கப் பள்ளிகள், பிற பள்ளிகளில் லோயர் பிரைமரி வகுப்புகள் நீங்கலாக மற்றெல்லா கல்வி நிறுவனங்களும் புதிய உத்தரவின்படி 12-ந்தேதி திறக்கப்படும்.

ஜூன் திங்கள் முதல் நாள் அல்லது ஜூன் முதல் வாரத்தில் அந்தக் கல்வி நிறுவனங்கள் திறக்கப்படவிருந்தன.

இந்த ஒத்திவைப்புக்கான காரணத்தைக் கேரள அரசு தனது ஆணையில் . குறிப்பிடவில்லையென்றாலும் மாநிலத்தின் உணவு நிலைமை கடுமையாக இருப்பதை முன்னிட்டே இவ்வாறு முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுகிறது.

லோயர் பிரைமரி பள்ளிகளில் ஏழைக் குழந்தைகளுக்கு, 'கேர்' நிறுவன திட்டத்தின்கீழ் மதிய உணவு அளிக்கப்படுகிறது.

பத்தாயிரம் திருட்டுப் புத்தகங்கள்

ஒரே வீட்டில் கண்டுபிடிப்பு

இலண்டன், மே 31—

ஒரு நூலகத்திலிருந்து களவு போன ஒரு புத்தகத்தைப் பற்றி விசாரிப்பதற்காகப் போலீசார் ஒரு வீட்டுக்குப் போனபோது, புத்தகக் கடைகள், பொது—தனியார் நூலகங்கள் ஆகியவற்றிலிருந்து களவாடப்பட்ட 10 ஆயிரம் புத்தகங்களை அங்கே கண்டுபிடித்தனர்; அவற்றை எடுத்துச் செல்ல ஐந்து லாரிகள் தேவைப்பட்டன. —நேபன்

தூத்துக்குடித் திட்டம்!

அமைச்சர் மு. கருணாநிதி கடிதத்துக்கு டில்லி பதில்

சென்னை, மே 31—

தூத்துக்குடித் துறைமுகத் திட்டத்தை நிறைவேற்ற வற்புறுத்தித் தமிழக அரசின் சார்பில் பொதுப்பணித் துறை அமைச்சருக்கு எழுதிய கடிதத்துக்குப் பதில் வந்திருக்கிறது; இத்தகவலை அமைச்சர் கருணாநிதி வெளியிட்டார்.

"உங்கள் கடிதம் கிடைத்தது; தூத்துக்குடித் துறைமுகத் திட்ட வேலை பற்றி நீங்கள் எழுதியுள்ளதை விரைந்து கவனித்து வருகிறோம். விரைவில் பதில் அளிக்கிறோம்"

என்று, மத்திய அமைச்சர் வி. கே. ஆர். வி. ராவ் எழுதியுள்ளாராம்.

இரயில்வே நிர்வாகத்தின் போக்கு

நாடாளுமன்றத்தில் குற்றச்சாட்டு

புதுடில்லி, மே 31—

நாடாளுமன்றத்தில், இரயில்வே வரவு-செலவுத் திட்டத்தின்மீது நடைபெற்ற விவாதத்தின்போது பல உறுப்பினர்களும் இரயில்வே நிர்வாகத்தைக் குறை கூறினர்.

ஜனசங்க உறுப்பினர் ஏ. பி. வாஜ்பாயி பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"சாலைப் போக்குவரத்துடன் போட்டியிடுவதில் இரயில்வே பின்னடைந்துவிட்டது. இரயில்வேத் துறைக்கு இப்பொழுது ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படும் இழப்பு, இத்தோல்வியின் விளைவே ஆகும்."

இரயில்வே அதிகாரிகள் அனுபவித்துக்கொண்டு வரும் உல்லாச வசதிகளைக் குறித்து பல உறுப்பினர்களும் அதிருப்தி தெரிவித்தனர்.

இவர்களின் உபயோகத்திற்காக 900 சொகுசுப் பெட்டிகள் ஒதுக்கப்பட்டிருப்பதைப் பல உறுப்பினர்களும் கண்டித்தனர்.

"இந்தச் சொகுசுப் பெட்டிகளை, பிரயாணிகள் பெட்டிகளாக மாற்றினால் ஆண்டுதோறும் 65 புது வண்டித் தொடர்களை விடலாம்"

என்று, திரு. வாஜ்பாயி குறிப்பிட்டார்.

பதிலளித்த துணை அமைச்சர் பரிமால்கோஷ், அதிகாரிகள் உபயோகிக்கும் பெட்டிகள் பரிசோதனைப் பெட்டிகள்தான் என்றும், சொகுசுப் பெட்டிகள் அல்லவென்றும், அப்படிப்பட்ட பெட்டிகள் ஒரு சிலவே உள்ளன என்றும், இது சம்பந்தமாகத் தவறான ஒரு கருத்து நிலவுகிறது என்றும் குறிப்பிட்டார்.

வணிக வரி விதிப்பு

மாறுதல் செய்யத் திட்டம்

அமைச்சர் அறிவிப்பு

மதுரை, மே 30—

"விற்பனை வரி உயருவதனால்தான் பொருள்களின் விலையும் உயருகிறது என்றும், இப்போது ரூ. 10,000 வரை விற்பனை வரி விதிவிலக்கு இருக்கிறது — இந்த விதிவிலக்கு வணிகர்களுக்கு அதிக உதவியளிப்பதாக அமையாது என்றும் கூறப்பட்டிருக்கிறது; அத்துடன், விற்பனை வரி விதிவிலக்கு ரூ. 50,000 வரையிலும் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டீர்கள்.

"விற்பனை வரி விலக்கை மாற்றியமைக்க விருக்கின்றோம்; ஆனால், நீங்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு ரூ. 50,000 வரை விதி விலக்கு அளிக்க இயலாது என்பதையும், கூடுமான வரையில்—குறைகூற முடியாத அளவில் விற்பனை வரி விலக்கின் வரம்பைத் தளர்த்தத் தமிழக அரசு கருதியுள்ளது"

என்று, வணிக வருவாய்த் துறை அமைச்சர் திரு கே. ஏ. மதியழகன் மதுரை—இராமநாதபுரம் வணிகக் கழகத்தின் வரவேற்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:—

"வரவு—செலவுத் திட்டம் சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் போது, இந்த விற்பனை வரி விதி விலக்கு பற்றி அறிவிக்கப்படும். இப்போதுள்ள வரம்பைத் தளர்த்தி, தகுந்த அளவுக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கப்படும்.

விற்பனைவரிச் சட்டம் சிக்கல் உள்ளதாக இருக்கிறது. சிக்கலற்ற விற்பனை வரிச் சட்டத்தை ஏற்படுத்தி வணிகர்களுக்கு உதவி செய்யத் தமிழக அரசு அக்கறை செலுத்தி வருகிறது.

"அரசு, விற்பனை வரிச் சட்டத்தை மாற்றவிருக்கிறது. சட்டத்தில் இருக்கிற சந்து பொந்துகளை சட்டத் திருத்தம் மூலம்தான் அடைக்க முடியும்"

அவல்-பொரிக்கு வரி விலக்கு

"கேசரிப் பருப்பைத் தமிழகத்திற்கு இறக்குமதி செய்ய அரசு அனுமதி கொடுக்காது; மக்களின் உடலுக்குக் கெடுதல் விளைவிப்பதே அதற்குக் காரணம்.

"ஜூன் மாதம் முதல் நாளிலிருந்து அவல்-பொரிகளுக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கப்படும்."

ஐரோப்பா முழுவதையும் இணைக்கும் இரயில்

மணிக்கு 250 மைல் வேகத்தில் செல்லத் திட்டம்

பான், மே 31—

ஐரோப்பா முழுவதிலுமுள்ள நகரங்கள்—விமான நிலையங்கள்—முக்கியமான சாலைகள் ஆகியவற்றை மணிக்கு 250 மைல் வேகத்தில் செல்லும் இரயில் மூலம் இணைக்கும் ஒரு திட்டத்தை இரயில்வே நிபுணர்கள் வகுத்து வருகின்றனர்.

இருப்புப் பாதைகளுக்குப் பதிலாகக் காற்று மெத்தைமீது செல்லும் ஜெட் எஞ்சின்கள் இதற்குப் பயன்படுத்தப்படலாம். (நேபன்)

புதிய ஆண்டில் அதிகப்படியாக 2 இலட்சம் மாணவர்

அனைவருக்கும் கல்வி வசதி கேரள அரசு ஆயத்தம்

திருவனந்தபுரம், மே 31—

கேரளத்தில் வரும் கல்வி ஆண்டில் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட சிறுவர்களுக்குப் பள்ளிகளில் இடம் கொடுத்தாக வேண்டும். கேரள அரசு இதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.

பள்ளிகளில் அதிக வகுப்புக்கள் ஏற்படுத்தப்படும். பள்ளிகளில் சேர வரும் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மேலும் சில பிரிவுகளை ஏற்படுத்திக்கொள்ளத் தனியார் நிறுவனங்களுக்கும் அனுமதி கொடிக்கப்பட்டிருக்கிறது.

பள்ளி நேரத்தைக் கூட்டி, முற்பகலிலும் பிற்பகலிலும் 'ஷிப்ட்' முறையில் கல்வி புகட்ட ஏற்பாடு செய்யப்படும்,

பிற்பகல் பள்ளி காலை 8 மணிக் தொடங்கி பிற்பகல் 12-45 மணிக்கு முடியும்; பிற்பகல் பள்ளி பகல் 12-45 மணிக்குத் தொடங்கி மாலை 5 மணிக்கு முடியும்.

முற்பகலில் நடைபெறும் பள்ளிகளில் முடிந்தவரையில் மாணவிகள் இடம் பெறுவர்.

அதிக மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவிருப்பதால், அதற்குத் தகுந்தவாறு பள்ளிக் கட்டிடங்களை விரிவுபடுத்துகிறது. கூரைப் பள்ளிகளாக இருந்தால் அவற்றையும் விரிவுபடுத்தி கூரை வேயப்படுகிறது.

பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு கேரளத்தில் பற்றுக்குறை இல்லை.

பாடப் புத்தகங்கள் அனைத்தும் மீண்டும் அச்சுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. புத்தகம் வழங்குவதிலும் தொல்லை எதுவும் [illegible]படாது என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐயோ, பாவம்!

1. "இட நெருக்கடி காரணமாக யாருக்கும் (கல்லூரிகளில்) இடமில்லை என்ற நிலை தோன்றுமானால் அது விரும்பத்தகாத விளைவுகளையே ஏற்படுத்தும். அந்த நிலை நேராதவாறு பார்த்துக்கொள்ளத் தமிழக அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கிறோம்."

2. "அதேபோல் தொழில் கல்லூரிகளில் மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்திலும் தமிழக அரசு முன்னர் இருந்த நடைமுறைகளையே பின்பற்றுமென்று எதிர்பார்க்கிறோம்."

3. "தி. மு. க. ஆட்சி வேறெதைச் செய்யத் தவறினாலும், கல்வித் துறையில் காமராஜ் சகாப்தம் என ஆரம்பித்த பொற்காலத்துக்குக் களங்கம் கற்பிக்கும் வகையில் எதையும் செய்யாமல் பார்த்துக்கொள்வது நல்லது."

[காங்கிரசுக் கட்சியின் அதிகாரபூர்வமான நாளேடு போலத் தன்னை இனங் காட்டிக்கொள்ளும் 'நவசக்தி'யின் 31---5---67-ம் நாளைய தலையங்கத்தின் சில பகுதிகள் இவை.]

★

1. கழகம் ஆட்சிப் பொறுப்பேற்று இன்னம் முழுமையாக மூன்று மாதம் ஆகவில்லை; அதற்குள் என்ன---கழகம் புதிதாக ஏதாவது பள்ளிக்கூடங்களை, கல்லூரிகளையா கட்டிட முடியும்? அற்புத விளக்கு வைத்திருக்கும் அலாவுதீனா கழகம்? 'விரும்பத்தகாத விளைவு ஏற்படும்' என்று சொல்வதற்கு என்ன பொருளோ?

2. அதுமட்டுமல்ல; தொழில் கல்லூரிகளில் மாணவர் அனுமதிக்கப்படும் முறையில் முன்னர் இருந்த நடைமுறைகளையே பின்பற்ற வேண்டுமாம்! முன்பு இருந்த நடைமுறைதான், தேர்தலுக்குமுன் நடந்த சட்டமன்றத்தில் நாறிற்றே!

இலஞ்சம் வாங்கிக்கொண்டு மாணவர்களைச் சேர்த்தார்கள் என்பதைத் தாம் நிரூபிக்காவிட்டால், தாம் பதவி விலகுவதாகவும், அதேபோல் காங்கிரசு அமைச்சர்கள் விலகத் தயாரா என்றும், சட்டமன்ற உறுப்பினர் நெல்லிக்குப்பம் தோழர் வெ.கிருஷ்ணமூர்த்தி கேட்டாரே---நினைவில்லை? அந்த நடைமுறையைக் கழகம் பின்பற்ற வேண்டுமாம்!

3. 'காமராஜ் சகாப்தம்' என்று ஆரம்பித்த பொற்காலத்துக்குக் களங்கம் வராமல் கழக ஆட்சி இருக்க வேண்டுமென்று ஒரு உபதேசம்!

இல்லாத ஒரு கற்பனைச் சகாப்தத்தைப் படைத்துக்கொண்டு, அதைக் கழகமும் பின்பற்ற வேண்டுமென்கிறார்களே! ஐயோ, பாவம்!

நடக்க இருப்பவை -- பொதுக்கூட்டங்கள்

3--6--67

குஜிலியம்பாறை

தி. மு. க. கிளையின் சார்பில் மாலை 7-மணிக்கு குஜிலியம் பாறையில்; தலைவர்: இரா. அரங்கநாதன்; பேசுவோர்: எஸ். முத்து எம்.எல்.சி., கே. கிருட்டினமூர்த்தி எம்.எல்.ஏ., வி. எஸ். எஸ். மணி எம்.எல்.ஏ. இரா. இராமலிங்கம், செ. தம்பித்துரை, எம். கே. ஏ. சாமி, மற்றும் பலர்.

பெங்களூர் 11-வது வட்டம்

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு லட்சுமிநாராயனபுரம் பன்றெட்டி சர்க்கிள் அருகில்; தலைவர்: வெ. இராமலிங்கம் எம்.சி.; பேசுவோர்: வே. கண்ணன், மா. குப்புசாமி, எஸ். வி. பதி, எஸ். என். நாராயனன், திராவிடமணி எம்.சி., மற்றும் பலர்.

உடுமலை

நகர தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு பிரேவோ திடலில்; தலைவர்: ச. சு. பொன்னையன்; பேசுவோர்: சி. தமிழரசி, ஏ. எஸ். மணி, குழந்தைவேல், மா. சேரன், என். கன்னியப்பன்.

கோவை

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு 7-வது வட்டார உப்பிலியபாளையம் ஆடீஸ் தெரு, பள்ளித் திடலில்; தலைவர்: டி. சி. என். செல்வராசு; பேசுவோர்: ஈரோடு சின்னச்சாமி எம்.எல்.ஏ., மு. இராமநாதன், ப. கோபால், க. மருதாசலம், சேரள சுந்தரம், டி. டி. வேலு, மற்றும் பலர்.

அரக்கோணம்

நகர தி. மு. க. சார்பில் இரவு 8-மணிக்கு தர்மராசா கோயில் திடலில்; தலைவர்: ஏ. எல். சி. கிருட்டினசாமி; பேசுவோர்: அமைச்சர் கே. ஏ. மதியழகன், எஸ். ஜே. இராமசாமி எல்.எல்.ஏ., மற்றும் பலர்.

4--6--67

கரூர்

15-வது வட்ட தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு கரூர் காமராசர் சாலையில் தலைவர்: கே. முருகேசன்; பேசுவோர்: மதுரை முத்து எம்.எல்.சி., ஏ. அம்மையப்பன், கே. கனகராசு, என். ஆர். இராமசாமி, கே. ஜி. உமாகாந்தன், மற்றும் பலர்.

செல்லாண்டிபட்டி

தி. மு. க. சார்பில் பாராட்டு விழா; மாலை 7-மணிக்கு செல்லபாண்டிபட்டி மூவேந்தர் திடலில்; தலைவர்: தி. ம. பிச்சை; பாராட்டுவோர்: வீ. பொ. சாமிநாதன், ரெ. ந. இராசமாமி, முத்துசாமி, எஸ். நல்லுசாமி, பரமத்தி சண்முகம்; கே. ஜி. உமாகாந்தன், எம். பி. பெரியசாமி; பாராட்டுப் பெறுபவர்: பெ. செளந்தரபாண்டியன் எம்.எல்.ஏ.

புதுப்பாளையம்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு நாயக்கன் காடு திடலில் தலைவர்: எஸ். எம். பழனியப்பன்; பேசுவோர்: க. அன்பரசு, கே. இராமராசன் எம்.எல்.ஏ., கே. எஸ். அனந்தன், வி. வி. வெங்கடாசலம், அத்தாணி பாபு, ஜி. பி. வெங்கிடு, ஜி. எஸ். இராமசாமி, பி. கே. பழனியப்பன், எஸ். கே. ..., செங்குட்டுவன், பு. கா. ஆறுமுகம், பி. ஆர். கே. சாமி.

மேட்டுப்பட்டி — திண்டுக்கல்

24, 29, 30-வது வட்டார தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு காவல் நிலையம் அருகில்; பேசுவோர்: தமிழரசி பி.ஏ., மற்றும் மலர்.

காஞ்சிபுரம்

5-வது வட்ட தி. மு. க. சார்பில் ஆண்டு விழா; மாலை 6-மணிக்கு சேசாத்திரிபாளையம் மேட்டுத் தெருவில்; தலைவர்: ஏ. விசுவநாதம்; பேசுவோர்: சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, சி.வி.எம். அண்ணாமலை, கே. எம். இராசகோபால், சி. சிட்டிபாபு எம்.பி. என். கிருடினன், எஸ். முருகேசன், கே. வரதராசன்.

பழனி

11-வது வட்ட மஜீத் மன்ற 10-வது ஆண்டு விழா; இரவு 7-மணிக்கு கோட்டை திடலில்; தலைவர்: மு. க. எகையா; பேசுவோர்: கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ, மற்றும் பலர்.

பெங்களூர் 20-வது வட்டம்

தி. மு. க. சார்பில் மாலை 5-30 மணிக்கு டாக்டர் ராயன் சாலை 2-வது தெருவில் (பின்னி மில் அருகில்); தலைவர்: மா. மன்னர்; பேசுவோர்: சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., தி. திராவிடமணி, எஸ். என். நாராயணன், ஏ. கண்ணன்.

செருகடம்பூர்

தி. மு. க. சார்பில் பாராட்டுக் கூட்டம்; மாலை 6-மணிக்கு கடைத்தெருவில்; தலைவர்: நா. மு. சக்கிரியா; பாராட்டுப் பெறுபவர்: சோமசுந்தரம் எம்.எல்.ஏ.; பாராட்டுவோர்: ம. கோ. மணி, பொன். தருமன், நா. செல்வதுரை, போ. ம. வேலன், க. கோ. கனேசன், அ. வேலு, அ. இலட்சுமணன், பி. ஏ. லிங்கன், மு. செகபர் அலி, மற்றும் பலர்.

சென்னை 41-வது வட்டம்

கோபாலபுரம் திருவள்ளுவர் மன்றச் சார்பில் பாராட்டுக் கூட்டம்; இரவு 7-மணிக்கு திரு.வி.க. நகர் எதிர் திடலில்; தலைவர்: ந. பொ. சாமி; பேசுவோர்: அமைச்சர் சத்தியவாணிமுத்து, ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., த. ல. கோவிந்தசாமி, சி. ஆர். ஜேசுதாசன், அருமைநாதன்.

ஸ்டேட் பாங்கியிலுமா இந்த நிலை?

இந்த வேடிக்கையை எங்காவது கேட்டிருக்கிறீர்களா?

உடலுழைப்புக்காரரெல்லாம் தாங்கள் இப்போது 8 மணி நேரம் உழைத்துக்கொண்டிருப்பதை குறைத்து இனி 7 மணி நேரம் உழைத்திட வழி என்ன என்று தேடிக்கொண்டிருக்கையில் 'ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா' மேல்நிலை ஊழியர்கள் (சூப்பர் வைசிங் ஸ்டாப்),

எல்லையற்று நீண்டுகிடக்கும் தங்கள் வேலை நேரத்தை நாளுக்கு 8 மணி நேரமாகக் குறைத்துக் கொள்ள நிர்வாகத்தோடு போராடுகிறார்களாம்!

"சனிக்கிழமைகளில் 5½ மணி நேரமும், பிற நாட்களில் 8 மணி நேரமும்தான் நாங்கள் இனி வேலை செய்ய முடியும்" என்று அவர்கள், நிர்வாகத்துக்கு அறிவித்திருக்கிறார்கள்!

இரண்டு ஆண்டுகளாகத் தங்கள் வேலை நேரம் பற்றி பேச்சு வார்த்தை நடத்தித் தோல்வி கண்ட அவர்கள், துணிந்து 1—6—67 முதல் இந்த நடவடிக்கை மேற்கொள்ளுகிறார்கள்.

தாங்கள் எடுக்கும் இந்த முடிவால் பாங்கிக்கு வரும் பொது மக்களுக்கு எத்தகைய தொல்லையும் நேரவொட்டாமல் பார்த்துக் கொள்வதாகவும், அதே நேரத்தில் பொதுமக்களும் வாடிக்கையாளரும் தங்கள் போராட்டத்திற்கு ஆதரவு காட்டிடவேண்டுமெனவும் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

நிர்வாகங்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கவேண்டியது பொதுத்துறை நிர்வாகம்! அங்கேயா இப்படி?

விலை உயர்வைத்தடுக்கும் இலட்சணம் இதுதானா?

நாடாளுமன்றத்தில் க. அன்பழகன் வினா

புதுடில்லி, ஜுன் 1—

"தமிழக அரசு மக்களுக்குக் குறைந்த விலையில் அரிசி வழங்கிவருவதற்கு மத்திய அரசு உதவி அளிக்க வேண்டும் என்று தமிழக அரசு கேட்பது நியாயமான தாகும்.

"விலை உயர்வைத் தடுக்கவேண்டும் என்பதுதான் எங்கள் கொள்கை" என்று கூறிவரும் மத்திய அரசு, 1 கிலோ அரிசியை 60 காசுக்கு விற்க முயற்சிக்கும் மாநிலங்களுக்கு உதவி செய்ய ஏன் முன்வரவில்லை?"

என்று நாடாளுமன்றத்தில் தி. மு. க. குழுத் தலைவர் க. அன்பழகன் அவர்கள் பேசுகையில் வினவினார்.

இதற்குப் பதிலளித்து துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"குறைந்த விலைகளில் உணவுப் பொருட்களை வழங்கும் மாநில அரசுகள், அதைத் தங்கள் சொந்த வசதிகளிலிருந்தே ஈடு செய்துகொள்ள வேண்டும். இந்தச் சுமையை மத்திய அரசு ஏற்க இயலாது; ஏனெனில், இப்படிச் செய்தால் மத்திய அரசு நாடு முழுவதுக்கும் உதவி தரவேண்டும். இதற்கு மட்டும் ரூ. 1,000 கோடி தேவைப்படும்."

பிர்லாவுக்கு எல். ஐ. சி. கடன்!

புதுடில்லி, ஜுன் 1—

1961—1967-ம் ஆண்டுக் கிடையிலான ஆறு ஆண்டுக் காலத்தில், பிர்லா குடும்பத்தாருக்குக் கடன் வழங்குவதாக எல். ஐ. சி. நிறுவனம் ஒப்புக்கொண்ட தொகை ரூ. 655.85 இலட்சம்.

இன்னம் கடன்கோரிபிர்லா சார்பில் கொடுக்கப்பட்டிருக்கும் மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை ரூ. 70 இலட்சம்.

'தொழில் வளர்ச்சி' என்ற பேரில் பெருமுதலைகள் பெறுகிற பண உதவியின் இலட்சணம் இது!

எம். ஜி. ஆர். சுடப்பட்ட வழக்கு

எம். ஆர். இராதா வாக்குமூலம் பதிவு

சென்னை, ஜுன் 1—

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரனைக் கொல்லும் முயற்சியாக துப்பாக்கியால் சுட்டதாகவும், தற்கொலை செய்துகொள்ளும் எண்ணத்தில் தன்னைத்தானே இரண்டு முறை சுட்டுக்கொண்டதாகவும் போலீசாரால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நடிகர் எம். ஆர். இராதா, தம்மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை மாஜிஸ்திரேட் கோர்ட்டில் இன்று மறுத்தார்.

அவரது வாக்குமூலத்தைப் பதிவு செய்த மாஜிஸ்திரேட் வழக்கை ஜுன் 3-ம் நாளுக்கு ஒத்திவைத்தார்.

இராதா தனது வாக்குமூலத்தில், சினிமா எடுப்பது சம்பந்தமாகத் தயாரிப்பாளர் வாசுவுடன் எம். ஜி. ஆர். வீட்டிற்கு சனவரி 12-ம் நாள் சென்றதாகவும், அந்த நேரத்தில் எம். ஜி. ஆர். தான் தன்னை முதலில் சுட்டதாகவும், எம். ஜி. ஆர். துப்பாக்கியுடன் நின்றிருந்ததாகவும் கூறியிருக்கிறார்.

வெடிச்சத்தம் கேட்டதும் திரும்பிப் பார்த்ததாகவும், துப்பாக்கியுடன் எம். ஜி. ஆர். நின்று கொண்டிருந்ததைக் கண்டதாகவும், தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் நோக்கத்துடன் எம். ஜி. ஆரிடமிருந்து கஷ்டப்பட்டுத் துப்பாக்கியைப் பிடுங்கி விட்டுச் சுட்டதாகவும், அந்தக் குண்டு எம். ஜி. ஆர். மீதோ வேறு எங்கே பட்டதாகத் தனக்குத் தெரியாது என்றும் வாக்குமூலத்தில் இராதா குறிப்பிட்டிருக்கிறார்.

குற்றஞ்சாட்டப்பட்டிருப்பதன் அடிப்படையில் மாஜிஸ்திரேட் இராதாவிடம் கேள்விகளைக் கேட்டார்.

பல கேள்விகளுக்கும் இராதா, 'தெரியாது' என்றும், சில சந்தர்ப்பங்களில் 'பொய்' என்றும் பதிலளித்துள்ளார்.

ஆட்டோ--ரிக்ஷாக்கள் அதிகரிக்கும்

சென்னை, மே 1—

"சென்னையில் தற்போது ஓடிக்கொண்டிருக்கும் ஆட்டோ-ரிக்ஷாக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது குறித்து அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது"

என அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ROJA
ரோஜா பாக்கு & புகையிலை
N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

அமைச்சர் மு. கருணாநிதி பிறந்த நாள் விழா

பொதுப் பணித்துறை யமைச்சர் மாண்புமிகு மு. கருணாநிதி அவர்களின் 43-வது பிறந்த நாள் விழா 3—6—67 காலை 8-30 மணிக்கு, சென்னை--கோடம்பாக்கம் காமராசர் காலனியில் உள்ள கலைஞர் கருணாநிதி மன்றத்தில் கொண்டாடப்படும். விழாவுக்கு ஏ. எஸ். இராமன் தலைமைவகிப்பார்; பல முக்கிய தோழர்கள் கலந்துகொள்வர். குழந்தைகட்கு இனிப்பு வழங்கப்படும்.

பணிமனைத் திறப்பு விழா

சென்னை 88-வது வட்டம் திருவள்ளுவர் சாலை, 11-ம் எண் இல்லத்தில், தமிழ் வளர்ச்சி மன்றத்தின் பணிமனைத் திறப்பு விழா வட்ட தி. மு. க. செயலாளர் க. இளமதி தலைமையில், 4—6—67 காலை 9-மணிக்கு நடைபெறும்; தோழர் பா. இலட்சுமணன் வரவேற்பார்; கழகக் கொடியை ஏற்றிவைத்து, மாநகராட்சி உறுப்பினர் வ. புருடோத்தமன் பேசுவார்.

உதயநத்தத்துக்கு சாதிக்பாட்சா வருகை

ஊராட்சிமன்றம் வரவேற்கும்

வ. ஆ. மாவட்டம் உதயேந்திரம் ஊராட்சியின் சார்பில் 4-6-67-ல் சுகாதாரத் துறை அமைச்சர் திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சாவுக்கு வரவேற்பளிக்கப்படும்.

கூடுவாஞ்சேரிக்கு அரசு பஸ்

அமைச்சருக்குநன்றியறிவிப்பு

கூடுவாஞ்சேரி தி. மு. க. சார்பில்—தோழர் ஆலாலசுந்தரம் அவர்கள் மூலம் கொடுக்கப்பட்ட கோரிக்கை மனுவை ஏற்றுக்கொண்டு, சென்னை பிராட்வேயிலிருந்து கூடுவாஞ்சேரிவரையில் அரசினர் போக்குவரத்துத் துறை பஸ்விட ஆணை பிறப்பித்த பொதுப் பணித் துறை அமைச்சர் மாண்புமிகு மு. கருணாநிதி அவர்கட்கு, கூடுவாஞ்சேரி தி. மு. க. சார்பிலும், பொதுமக்கள் சார்பிலும் நன்றி தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இந்தப் பஸ் நாளை (ஜுன் 3) முதல் விடப்படுகிறது.

இதே கோரிக்கையை கூடுவாஞ்சேரி சமூக நலச் சங்கத்தினரும் கொடுத்திருந்தனர்.

ஆரணி---ச. வி. நகரம் உயர்நிலைப் பள்ளி

ஏ. சி. நரசிம்மன் திறந்துவைப்பார்

ஆரணி-ச. வி. நகரம் அரசினர் உயர்நிலைப் பள்ளிக் கட்டடத் திறப்பு விழா, 5—6—67 மாலை 4-மணிக்கு, மாவட்ட ஆட்சியாளர் பி. எம். பெல்லியப்பா முன்னிலையில்—ஊராட்சி ஒன்றியத் தலைவர் ஆர். என். வீரபுத்திரன் தலைமையில் நடைபெறும்; ஆரணி சட்டமன்ற உறுப்பினர் ஏ. சி. நரசிம்மன், கட்டிடத்தைத் திறந்துவைப்பார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13), அச்சிட்டு வெளியிடப்படுகிறது.